**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI.**

**O.S. No.397/2023**

**P.W.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : எம்.அழகர்ராமானுஜம் | **Father Name** : | |
| **Village** | : | **Taluk** | : |
| **Calling** | : | **Age** | : |

Solemnly affirmed by of this Court on **15.07.2026** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி. வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். 16.12.2019ம் தேதியிட்ட பிரதிவாதி ரூ.11,00,000/–த்திற்கு வாதிக்கு கொடுத்த 001300 எண்ணுள்ள Axis Bank–ன் காசோலை அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.12.2019ம் தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கு State Bank of India வங்கி வழங்கிய குறிப்பாணையின் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.01.2020ம் தேதி வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.01.2020ம் தேதி மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.02.2020ம் தேதியன்று பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.03.2020ம் தேதியன்று வாதி Axis வங்கி மேலாளருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.03.2020ம் தேதியன்று மேற்படி அறிவிப்பை Axis வங்கி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.03.2020ம் தேதியன்று

வழக்கு காசோலையை வாதி State Bank of India வங்கியில் செலுத்தியதற்கான ரசீதின் அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.03.2020ம் தேதியன்று காசோலை திருப்பப்பட்டதற்காக State Bank of India வங்கி வழங்கிய குறிப்பாணையின் அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.03.2020ம் தேதி வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பு 24.03.2020ம் தேதியன்று திருப்பப்பட்டதற்கான return cover **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/– அழகர்ராமானுஜம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.15 14:32:29 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.